
“நீங்கள் ஏன் இரவில் தூங்குகிறீர்கள்?
நிலாவின் ஒளி, நட்சத்திரத்தின் அழகு
அதை ரசிக்கவில்லையா?” என்றது.
“அதற்கு சிங்கம் ஒரு கண்ணை
மட்டும் விழித்துப் பார்த்து, ‘பகலில் தான்
எங்களுக்கு உணவு கிடைக்கும். அதனால்தான்
இரவில் ஓய்வெடுக்கிறோம்” என்று கூறியது.



மாமரக் கிளையில் இருந்த குயில் இனிய குரலில் ‘கூக்கூ.... கூக்கூ....’ எனக் கூவியது.
“நான் காலை சூரிய ஒளியில் தான் பாடுவேன். அந்த ஒளி என் குரலை அழகாக்கும்.” எனக் கூறியது.



அப்போது அங்கு வந்த வௌவால், குரங்கிடம் சொன்னது, “எங்களுக்குப் பகலில் தான் தூங்கப் பிடிக்கும் அதுவும் தலைகீழாக எனக் கூறி சிரித்தது. சூரிய வெப்பத்தில் இறக்கைகள் சீக்கிரம் சோர்வடைந்துவிடும். இருட்டு தான் எங்களுக்குப் பாதுகாப்பு! நாங்கள் கண்களால் பார்ப்பதை விட, ஒருவித சத்தத்தை (echolocation) எழுப்பி, இரையைக் கண்டுபிடிப்போம். அதனால்தான் இந்த நிலவொளி எங்களுக்குப் பிடித்திருக்கிறது!” என்றது.


குதிரை கனைத்துக்கொண்டே “நீங்கள் செரல்வது சரிதான். சூரிய ஒளியில், புல்வெளிகளில், காற்றை விட வேகமாக ஓடுவது எனக்குப் பிடிக்கும். இரவு என்பது அடுத்த நாள் ஓட்டத்திற்காக என் கால்களுக்கு நான் தரும் ஓய்வு நேரம்.” என்றது.

“நண்பரே, நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை! நான் பகலாடியா இருந்தாலும், நிலவு வெளிச்சத்தில் மரங்களின் நிழலோடு மறைந்து இருட்டில் பதுங்கிச் சென்று, என் கூர்மையான காதுகளால் இரையின் சத்தத்தைக் கேட்டு வேட்டையாடுவதில் நான் சிறந்தவன்”. என்று நரி ஊளையிட்டுக் கூறியது.



நரியாரே, உங்கள் தந்திரம் தான் காட்டுக்கே தெரியுமே. வேட்டைக்கு தான் இரவு தேவை, என் அழகிய சிறகையும் நடனத்தையும் பார்க்க விரும்பினால் பகலில் தான் வர வேண்டும் என்று கூறி சோம்பல் முறித்தது மயில்.

“ஆந்தையாரே! ‘இரவின் அழகைப் பாருங்கள்’ என்று நீங்கள் எங்களிடம் பேச ஆரம்பித்தது, இப்போது விடிந்தே......விட்டது” என்றது சிங்கம்.

